இலஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர்

களம் -20 வெற்றி -09

# நேர்மை நெறி

செப்டம்பர் 2022


(ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் திங்களிதழ்) (Reg.No.349/2001)

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது

(NERMAI NERI)

Rs.10

## மக்களின் அறியாமையே ஊழலின் வளர்ச்சி




## ஊழல் நம் நாட்டின் சாபம்



PUBLISHED BY

ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

பதிவு மற்றும் செயல் அலுவலகம்: 155, “நம்பகம்”,
கொன்னூர் நெடுஞ்சாலை, அன்பகம், சென்னை-600023

Cell:8778312823

e-mail:acmchennai2001@yahoo.co.in

website:anticorruptionchennai.com

## தலைவர் மடல்

**அன்பார்ந்த உறுப்பினர் சகோதர சகோதரிகளே** !

வணக்கம் !. மீண்டும் இம்மடல் மூலம் தொடர்பு கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சென்ற பொதுக்குழு கூட்டத்திற்கு வர இயலாமைக்கு வருந்துகிறேன். சில தவிர்க்க இயலாத காரணங்களால் யாம் பதவி விலகினோம். ஆனால், அது சென்ற பொதுக்குழுவில் சில கசப்பான சம்பவங்களையும், இயக்க துணைவிதிகளை மீறிய செயல்களையும் அரங்கேற்றிவிட்டது. இதனால், கடந்த செயற்குழுவில், செயற்குழு உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க நான் மீண்டும் இயக்கத் தலைவராக இணைத்துக் கொள்ளப்பட்டேன். இயக்கத்தின் தலைவர் என்ற வகையில், ஒவ்வொரு இயக்க உறுப்பினர் மற்றும் பல்வேறு நிர்வாகிகளுக்கும் இரு கரம் கூப்பி கீழ்கண்ட வேண்டுகோள்களை வைக்கிறேன்:

i. நமது இயக்கம் மக்கள் நலச்சங்கமல்ல. இங்கு நிர்வாகிகள், பதவி மேலே செல்ல, பதவி சுகம் எதுவும் இன்றி, அதிகமான தியாகங்களைச் செய்ய வேண்டியவர்கள் ஆவார் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்;

ii. பதவி வகிப்பவர்கள் பணிவும், விட்டுக்கொடுக்கும் தன்மையும், மன்னிக்கும் மனப்பக்குவமும், தான் என்ற அகந்தையற்றும் இருத்தல் வேண்டும். ஆனால், இயக்க விதிகளைக் கடைபிடிக்காமல் துச்சமாக செயல்படுவர்களயும், இயக்க குறிக்கோள்களுக்கு எதிராக செயல்படுவர்களையும் சிறிதும் தயவு தாட்சன்யமின்றி தண்டிக்கத் தயங்காதவர்களாகவும் இருக்க வேண்டும்.

iii. நலப்பணிகளை விடுத்து ஊழலுக்கு எதிரான பணிகளில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும்.

iv. தவறு செய்தவர்களாயினும், அவர்களுக்கு உரிய மரியாதை குன்றாமல் சட்ட விதிகளின் படியே நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர, நேரடியாக நடவடிக்கையில் அவர் மீது நடவடிக்கையில் ஈடுபடலாகாது;

v. பெரும்பான்மை இருப்பின், இயக்க கூட்டத்தில் எப்படி வேண்டுமானாலும் நடக்கவும் முடியாது, நடக்கவும் கூடாது என்பதை அனைவரும் உணர வேண்டும். ஊழல் வாதி என்று தெரிந்தும், பல கோடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டலும், ஒரு நீதிபதி அவரை சிரையில் தள்ளினார். எனவே, செயலின் நேர்மையும், சட்ட வழியதுவே முக்கியம். இதுதான் உலக நியதி.

vi. ஒவ்வொரு சங்கக்கூட்டமும் இயக்க குறிக்கோள்களை அடைய முயற்சிக்க வேண்டும். உறுப்பினர்களாகி விட்டு வெறுமனே இல்லாமல் கிளை மற்றும் மாவட்டக்கூட்டங்களில் கலந்து கொண்டு குறிக்கோள்களை நோக்கி நகர வேண்டும்.

vii. ஊழல் நாளுக்கு நாள் அதிவேகத்தில் பெருகிக்கொண்டே இருக்கிறது, மக்களிடமிருந்து வரும் எதிர்ப்போ குறைந்து கொண்டே செல்கிறது.

இதையெல்லாம் கவனத்தில் கொண்டு, ஒவ்வொருவரும் செயல்படவேண்டுகிறோம்.

நாம் சிறப்பாக செயல்படாவிட்டாலும், யாரும் இயக்கத்தை தவறிழைத்துவிட்டதாக குறைகூறாவண்ணம் நடத்தி செல்ல ஊறுதி கொள்வோம்.!

**ஒன்றுபடுவோம்! அறவழியில் போறாடுவோம்!! குறிக்கோள்களை வெல்வோம்.**

**அன்புடன்,**

**(ந.சுப்ரமணியன்)**

# குடும்ப அரசியல்

V கார்த்திகை ராஜன்
பொதுச் செயலாளர்

குடும்பம் என்பதுதான் சமூகம், அரசியல் என்பதன் அடிப்படை. குடும்பம் என்றால் ரத்த உறவில் கிளைத்தது. கண்களுக்குத் தெரியும் அம்மா, அப்பா என்பதற்கு அப்பால் பல தலைமுறைகளின் பண்பும், நிறமும் குணாதிசயங்களும் கொண்டது. நெடுங்காலத்திற்கு முன்னால் மனிதர்கள் ஏற்படுத்திக் கொண்ட அமைப்பு. இன்னும் சிதையாமல், உருக்குலைந்து போகாமல் இருப்பதற்கு அறிந்த காரண காரியங்களைவிட அறியாமல் இருக்கும் அம்சங்களே முக்கியம். தன் குடும்பம் நன்றாக இருக்க வேண்டும். பெருஞ்செல்வம் ஈட்டிப் புகழுடன் திகழ வேண்டும். அதிகமான அதிகாரம் பெற்று முதல் குடும்பமாக இருக்க வேண்டும் என்று ஒவ்வொரு குடும்பத்தினரும் படாத பாடுபட்டு வருகிறார்கள். அதில் ஆண் மக்கள் இருப்பதுபோலவே பெண்மணிகளும் இருக்கிறார்கள்.

குடும்பம் என்றால் அதற்குள் ஓர் அரசியல் உண்டு. அதுதான் குடும்பத்தை உயிர்ப்புடன் வைத்துக்கொண்டு இருக்கிறது. புராணங்கள், இதிகாசங்கள், காப்பியங்கள் எல்லாம் குடும்பத்தில் இருக்கும் அரசியலைத்தான் சொல்லி உள்ளன. அவற்றின் தொடர்ச்சியாகவே நாடகங்கள், சிறுகதைகள், நாவல்கள், கவிதைகள் எழுதப்படுகின்றன. திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள் எடுக்கப்படுகின்றன. அது அடுத்தவர் குடும்பத்தில் இருக்கும் அரசியலைத் தெரிந்துகொள்ளும் ஆர்வத்தின் விளைவு தான். குடும்பத்தின் பாரம்பரியம், சமூகப் பங்களிப்பு, கலாசார உயர்வு பற்றிச் சொன்னாலும் அதற்கு எதிராக பல கருத்துகள் சொல்லப்பட்டே வருகின்றன. குடும்பம் என்பது தன்னலம் சார்ந்தது. எல்லாவிதமான மனித மாண்புகளையும் குலைக்கிறது. அதாவது, குறைந்தபட்சமாக ஆளுவோர்க்குக் குடும்பம் இருக்கக் கூடாது.

குழந்தைகள் தாய், தந்தை பெயர் தெரியாமல் வளர்க்கப்பட வேண்டும். அதுதான் நாணயமான, பாரபட்சமற்ற ஒரு சமூகத்தை உருவாக்குமென்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கிரேக்க ஞானி பிளேட்டோ குடியரசு நூலில் எழுதினார். குடியரசு குடும்பத்தை ஒழித்த நூலென்றும், குடும்பம் இல்லாத ஒரு சமூகத்தை உருவாக்கப்பட்ட நூலென்றும் படிக்கப்பட்டு வருகிறது. ஆனால், குடும்பம் என்பது எந்தவிதமான சட்டவிதிகளாலும் கட்டமைக்கப்படவில்லை. எனவே, குடும்பங்களும், அதன் வழியாக அரசியலும் ஜீவிதமாக இருக்கிறது.

அரசியல் என்பது புதுச்சொல்லோ, மொழிபெயர்ப்போ இல்லை. அது பழந்தமிழ்ச் சொல். சிலப்பதிகாரத்தில் “அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாவதும்’ என்று பாடப்பட்டுள்ளது. எளிய குடும்பங்களில் இருந்துதான் அதிகாரம் படைத்த அரச குடும்பங்கள் தோன்றின. அவை நீடித்து நிலைத்திருக்க சில விதிமுறைகள் அமைத்துக் கொண்டன. அதில் முதல் விதி, மூத்த மகன் அரசனாவான். அது பல குடும்ப அரசியல் சச்சரவுகளுக்கு முடிவு கட்டியது. ஆனால், குடும்ப அரசியல் என்பதில் எந்த விதியும் எப்பொழுதும் நிலைத்து இருப்பதில்லை.

அரசனாகக் காத்திருக்கும் மூத்த மகனைத் தள்ளிவிட்டு இரண்டாவது, மூன்றாவது மகன் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்துக்கொள்வது சரித்திரம் முழுவதிலும் நடைபெற்று இருக்கிறது. மொகலாய பேரரசர் ஷாஜஹானுக்கு எழுபது வயதாகி இருந்தது. அவர் மூத்த மகன் தாரா ஷுகோ அரசனாகத் துடித்துக் கொண்டிருந்தான். மூத்த மகன்தான் அரசனாக வேண்டும் என்பது மாற்ற முடியாத விதி இல்லை. வலிமையும், திறமையுங் கொண்ட மகன் அரசனாவான் என்று சொல்லிக்கொண்டு தந்தையை சிறையில் அடைத்து, வாளே அரசுரிமை யைத் தீர்மானிக்கும் என்று ஔரங்கசீப் போரில் இறங்கினார். மூன்று சகோதரர்களையும் கொன்று ஆலம்கீர் என்று பட்டம் சூட்டிக்கொண்டு மொகலாய அரசரானார்.

அதுதான் குடும்ப அரசியல். அரச குடும்பங்களில் தான் அது நிகழும் என்பதில்லை. ஏழை, எளிய, பணக்காரக் குடும்பம் என்று எல்லாக் குடும்பங்களிலும் காலம் காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாடகங்கள், சிறுகதைகள், நாவல்கள் - குடும்ப அரசியல் சம்பவங் களின் கொடூரத்தைக் குறைத்துக் கற்பனை மாதிரி சொல்கின்றன. அதுவே படிக்க வைக்கிறது .ஒரு நூற்றாண்டிற்குள் இந்தியாவில் பல அரசியல் குடும்பங்கள் தோன்றியிருக்கின்றன. முதலில் தேச பக்தர் குடும்பங்களாக இருந்தன. தேச விடுதலைக்காகப் போராடி, அடிபட்டும் சிறைபட்டும் வந்த குடும்பங்களில் இருந்து சிலர் சுதந்திரம் பெற்றதும் ஜனநாயக தேர்தலில் நின்றார்கள். தேர்தலில் வென்று அமைச்சர்களானார்கள்; முதல் முறையாக அவர்களிடம் அதிகாரம் வந்தது.

அமைச்சர்களின் குடும்பங்கள் அரசியல் குடும்பங்களாக மாறின. குடும்ப உறுப்பினர்கள் அரசியல்வாதிகளாகவும் அரசியல் தரகர்களாகவும் மாறினார்கள். அதிகாரத்தோடு பணமும் வந்து சேர்ந்தது. புதிய ஜனநாயக ஆட்சிமுறை பலரையும் கவர்ந்தது. புதிய தொழில் ஒன்று இருப்பதைப் பலரும் கண்டு கொண்டார்கள். மக்கள் சேவைக்காக என்று சொல்லிக்கொண்டு அரசியலில் கால் பதிக்க ஆரம்பித்தார்கள். பாரம்பரிய கட்சியில் சேர்ந்து தேர்தல் களம் கண்டார்கள். அதன் செயற்பாடுகள் மீது விமர்சனங்கள் வந்ததும் புதிய கட்சிகளில் இடம்பிடித்துக் கொண்டார்கள். அவர்களின் குடும்பங்கள், அரசியல் குடும்பம் என்ற அந்தஸ்து பெற்றது.

அரசியல் கட்சிகள் மீது விமர்சனமும், அடையாளமும் இருப்பதைக் கண்ட சிலர் - புதிய கொள்கை, செயல்திட்டம், ஏழை எளிய மக்களை வாழ்விப்பதே ஒரே லட்சியம் என்று சொல்லிக்கொண்டு அரசியல் கட்சிகள் தொடங்கினர். அவர்கள் பெரும்பாலும் ஜாதி அபி மானிகளாக, சமயப் பற்றாளர்களாக, ஓய்வுபெற்ற அதிகாரிகளாக, பிரமுகர்களாக இருந்தார்கள். அவர்கள் மனைவி, மகன், மகள், மருமகள், சகோதரர்கள் என்று ஒரு பெரும் படையோடு அரசியல் களத்தில் இறங்கி, “சமத்துவம், அடித்தட்டு மக்களின் நல்வாழ்விற்கு எங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறோம். நாங்கள் பல்லாண்டு காலமாகப் பெற்ற அறிவும், அனுபவமும் உங்களை மேம்படுத்தப் போகிறது’ என்று பசப்பு மொழிகள் பேசுகிறார்கள்.

ஐம்பதாண்டுகளுக்கு முன்னால் ஓர் அரசியல் கட்சியில் பல இனம், மொழிகள், சமயம் சார்ந்தவர்கள் இணைந்திருந்தார்கள். எனவே, எங்கள் கட்சியே பெரிய குடும்பம் என்று பெருமிதத்தோடு சொல்லிக் கொண்டார்கள். தற்போது நிலைமை அடியோடு மாறிவிட்டது. கட்சித் தலைமை, அதிகாரம் முழுவதும் ஒரு குடும்பத்தின் கைக்குள் போய்விட்டது. எங்கள் குடும்பமே கட்சி. கட்சியை நடத்தத்தக்க வேண்டிய தலைமைப் பண்புகள் எங்கள் குடும்பத்தினர்களிடமே இருக்கிறது என்று பிரகடனப்படுத்திக் கொள்கிறார்கள்.

இந்தியாவில் அரசியல் கட்சிகள் குடும்பக் கட்சிகளாகி விட்டன என்பது குற்றச்சாட்டோ, விமர்சனமோ இல்லை; யதார்த்தம். காஷ்மீரத்தில் இருந்து கன்னியாகுமரி வரையில் பரந்து கிடக்கும் நிலப்பரப்பில் உள்ள பல கட்சிகள் குடும்பக் கட்சிகள்தான். குடும்ப ஆட்சிதான் நடைபெறுகிறது. அதில் மாநில கட்சிகள், தேசிய கட்சிகள், பெரிய கட்சிகள், சிறிய கட்சிகள் என்ற பேதமெல்லாம் கிடையாது.

அரசியல் குடும்பங்களில் இருந்து யாரும் எந்த வேலைக்கும் போவதில்லை. படித்திருந்தாலும் சரி, படிக்காவிட்டாலும் சரி, அரசியல் வாதி என்ற வேலைக்கு வந்துவிடுகிறார்கள். ஆண்கள் தான் என்றில்லை. பெண்களும் வந்துவிட்டார்கள். அரசியல் குடும்பப் பாரம்பரியத்தில் வந்த நாங்கள் வேறு வேலைகளுக்கு ஏன் போக வேண்டும்? மக்கள் சேவை என்பதே எங்கள் வேலையென்று சொல்கிறார்கள்.

அரச பரம்பரைகளை ஏற்றுக்கொண்டு வாழ்ந்த எளிய மக்களுக்கு ஆடம்பரமான அரசியல் குடும்பங்களை அங்கீகரித்துக் கொண்டு போவதில் சிரமம் ஏதுமில்லை. பொதுக் கூட்டங்கள், மாநாடுகள், பேரணிகள் என்று பலவற்றிலும் கருணையும், பரிவும் ஆறாக

ஓடப் பேசி மக்களின் வாக்குகளை அள்ளிக் கொண்டு வந்துவிடுகிறார்கள். ஒரு கட்சி பலவீனமாக இருந்தால் கூட்டணி சேர்த்துக்கொண்டு மக்களைத் தோற்கடித்து விடுகிறார்கள். அரசியல் குடும்பங்கள் பலவும் உலக மகா பணக்காரர்களின் குடும்பமாக இருக்கின்றன. ஆரம்ப காலத்தில் அரசியலில் எதிர் முகாமில் இருந்த அரசியல் குடும்பங்கள் சம்பந்தம் பண்ணிக்கொண்டு ஒரே குடும்பமாகித் தேசத்தைச் சுரண்ட ஆரம்பித்துவிட்டன. அதற்குப் பெரிய பட்டியல் இருக்கிறது.

உலகத்தில் பல பெரிய, சிறிய ஜனநாயக நாடுகளில் அரசியல் குடும்பங்களின் ஆட்சிதான் நடைபெறுகிறது. செல்வ வளம் கொழிக்கும், கல்வி அறிவு மிகுந்தவர்கள் வாழும் நாடான அமெரிக்காவில் அதிபர், மாநில ஆளுநர்கள், பெருநகர மேயர்கள் என்று அதிகாரம் மிக்க பதவிகளை அரசியல் குடும்பங்கள் பிடித்துக் கொண்டிருக்கின்றன. மேலும் இங்கிலாந்து, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, சிங்கப்பூர், இஸ்ரேல், மலேசியா - என்று பல நாடுகளில் அரசியல் குடும்ப ஆட்சிதான் பெரும்பாலும் நடைபெறுகிறது.

அரசியல் குடும்பங்களில் ஏராளமான பணம் இருப்பதாலும் ஆட்கள் நிறைந்திருப்பதாலும் தொழில், வர்த்தகம், கல்வி, பொழுதுபோக்கு, கேளிக்கை, ஊடகம், விளையாட்டு, ரியல் எஸ்டேட் என்று பல துறைகளில் கால் பதித்து வெற்றி பெற்று, மக்கள் ஆதரவு பெற்றிருக் கின்றன. ஆனால், அரசியல் குடும்பங்களின் முறையற்ற செயற்பாடுகள், லஞ்சம், ஊழல் பற்றி சில நாடுகளில் கடுமையான விமர்சனங் கள் வந்துகொண்டு இருக்கின்றன. சட்டபூர்வமாகத் தடுக்க வழி பார்க்கிறார்கள். குடும்ப அரசியல் என்பது மனிதர்கள் குடும்பமாக இருக்கிற வரையில் இருக்கவே செய்யும். குடும்பங்களின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அதிலேயே இருக்கிறது. ஆனால், அரசியல் குடும்பங்களின் செயற்பாடுகள் ஜனநாயகத்திற்கு எதிரானது. அதில் அதிகாரத்திற்கான குடும்ப அரசியலும் இருக்கிறது. எனவே, மக்களுக்குப் பாதிப்பு அதிகமாகிறது. அதனை அறிவதும், களைய வாக்களிப்பதும் மக்களின் ஜனநாயகக் கடமையாகிறது.

---

## நேர்மையாளர்களின் வாழ்வில் சில சம்பவங்கள்

### <u>கடமையைச் செய்யுங்கள்</u>

ஒரு சமயம் காவல் துறையினர் தேசிய நெடுங்சாலையில் ஒன்றில் வாகனங்களை நிறுத்தி சோதனை இட்டுக்கொண்டிருந்தனர். அப்போது, நடிகர் எம். ஜி. ஆர். காரில் வந்து கொண்டிருந்தார்.

காரில் அவர் இருப்பதை அறியாத ஒரு போலீஸ்காரர் அவரது காரை நிறுத்தினார். அப்போது காரினுள்ளே எம்.ஜி.ஆர். இருப்பதை அவர் பார்த்தார்.. அவர் காரை சோதனை இடாமல், “ மன்னிக்க வேண்டும் சார்! நீங்கள் போகலாம்!” என்றார்.

அதற்கு எம்.ஜி. ஆர். ”உங்கள் கடமையைச் செய்யுங்கள். எனக்காக உங்கள் கடமையிலிருந்து தவறாதீர்கள்!” என்றார். அதைக் கேட்ட அந்த போலீஸ்காரர் மெய் சிலித்து நின்றார்.

மக்கள் திலகம், புரட்சி நடிகர், பொன்மனச் செம்மல் என்றெல்லாம் பெயர் பெற்ற நடிகர் எம். ஜி. ஆர். தான் பின்னாளில் தேர்தலில் போட்டியிட்டு தமிழக முதல்வரானார்.

## தற்போதைய இந்திய அமைப்பின் முரன்பாடுகள்:

**மும்பை உயர் நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் டி.கே. ஸ்ரீவஸ்தவா குறிப்பிடுவது:-***

சாதாரண மக்களுக்கு ஒரு சட்டம், பெரும் புள்ளிகள், அரசியல்வாதிகளுக்கு ஒரு சட்டமா? நீங்களே முடிவு செய்யுங்கள்:

1. ஒரு குடிமகன் இரண்டு இடங்களில் வாக்களிக்க முடியாது.ஆனால், தலைவர் விரும்பினால், அவர் ஒரே நேரத்தில் இரண்டு வெவ்வேறு இடங்களில் இருந்து தேர்தலில் போட்டியிடலாம்.
2. ஒரு குடிமகன் சிறையில் இருந்தால் வாக்களிக்க முடியாது. ஆனால் ஒரு அரசியல்வாதியோ அல்லது ஒரு தலைவரோ சிறையில் இருந்தாலும் தேர்தலில் போட்டியிடலாம்.
3. ஒரு சாதாரண மனிதன் ஏதாவது ஒரு சிறிய குற்றத்திற்காக சிறைக்கு சென்றால் கூட அவனுக்கு வாழ்நாள் முழுவதும் அரசு வேலைக்கு தடை விதிக்கப்படும், ஆனால், கொலை அல்லது பாலியல் பலாத்காரம் போன்ற பெரிய குற்றம் செய்யும் தலைவன் எத்தனை முறை சிறையில் இருந்தாலும், அவர் தேர்தலில் தாராளமாக போட்டியிடலாம், அவர் பிரதமராகவும் அல்லது ஜனாதிபதியாக கூட போட்டியிடலாம். எந்த தடையும் இல்லை.
4. ஒரு சாதாரண மனிதன் வங்கியிலோ, அரசாங்கத்திலோ அல்லது தனியார் கம்பெனியிலோ, ஒரு சுமாரான வேலையைப் பெற, பட்டதாரியாக இருக்க வேண்டும். ஆனால், அரசியல்வாதி கட்டைவிரல் ரேகை வைக்கும் படிப்பறிவே உள்ளவராக இருந்தாலும், அவர் இந்தியாவின் நிதி அமைச்சராகவோ பிரதமராகவோ இருக்க முடியும். அவர் பள்ளிக்கே சென்றதில்லை என்றாலும், நாட்டின் கல்வி அமைச்சராகலாம்.
5. ஒரு குடிமகன், இராணுவத்தில் சேர குறிப்பிட்ட வயது வரம்பிற்குள் இருக்க வேண்டும். ஒரு சிப்பாயாக வேலை பெற, நீங்கள் 10 கிலோமீட்டர் ஓடி காட்ட வேண்டும். ஆனால் அரசியல்வாதி படிப்பறிவில்லாதவராகவும், உடல் ஊனமுற்றவராலவும், மற்றும் 90 வயதானவராக இருந்தாலும், அவர் பாதுகாப்பு அமைச்சராக இருக்கலாம், அந்த இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைக்கு கட்டளையிடலாம்.
6. அவருக்கே எதிராக எத்தனை வழக்குகள் இருந்தாலும், ஒரு தலைவர் காவல்துறை, அல்லது உள்துறை அமைச்சராகவே இருக்கலாம்.
7. ஒரு அரசு ஊழியர் 30 முதல் 35 ஆண்டுகள் சேவைக்குப் பிறகும் ஓய்வூதியம் பெற நிபந்தனைகளும், காலவரையும் உண்டு. ஆனால் ஒரு எம் எல் ஏ, எம்பி சேவை செய்வதாக சொல்லி பதவிக்கு வந்து, 5 வருடம் லஞ்சம், ஊழல் மற்றும் எத்தனை அராஜகம் செய்தாலும், எந்த நிபந்தனையும், கால வரையும் இன்றி வாழ்நாள் முழுதும் ஓய்வூதியம் கிடைக்கும்,

**இதில் அனைவருக்கும் எங்கே ஒரே நீதி இருக்கிறது?**

**இந்த அமைப்பு மாற்றப்பட வேண்டுமா, இல்லையா?**

தலைவர் மற்றும் மக்கள் இருவருக்கும் ஒரே சட்டம் இருக்க வேண்டுமா, இல்லையா?. இந்த செய்தியை அனுப்புவதன் மூலம் நாட்டில் விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.

இயக்கத்துக்கு நன்கொடைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

நன்கொடைகள். வருமான வரிச்சட்டம் பிரிவு **80 (G)** யின் கீழ் விலக்கு(சலுகை) உள்ளது. பணத்தை கீழ்க்கண்ட வங்கிக்கு **NEFT** மூலமாக அனுப்பலாம் .

**Indian OverSeas Bank, Ayanavaram Branch (IFSC Code: IOBA0000009)**
**Savings A/C No: 000901000041657**

# இலவசங்களால் ஆதாயம் அடைவது யார்..?

***- சாவித்திரி கண்ணன்***

August 25, 2022

இலவசங்கள் தொடர்பாக விரிவான விவாதத்திற்குள் போவதற்கு முன்பு நாம் ஒன்றை தெளிவுபடுத்திக் கொள்வது நல்லது. இதில் வேண்டும், வேண்டாம் என்ற இரு தரப்பு அரசியல்வாதிகளும் ஒரே நோக்கம் கொண்டவர்களே! ”மக்களின் தேவை அறிந்து ஒன்றை இலவசமாக தருவது என்பது ஒரு அரசியல் கட்சி அல்லது அரசாங்கம் எடுக்கும் முடிவு இதில் நீதிமன்றங்கள் தலையிட முடியாது” என வெங்கய்யா நாயுடு தொடங்கி பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் வரைக்கும் பல அரசியல்வாதிகள் பேசுகிறார்கள்!

இன்றைக்குள்ள நமது மத்திய மாநில அரசுகள் இரண்டுமே மக்கள் நல அரசுகளல்ல. இவை தீட்டும் திட்டங்கள், போடும் சட்டங்கள் யாவுமே தங்கள் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்கும், முதலாளிகளின் நலனுக்குமானது தான்!

”இலவசங்கள் தேவை” என்பதற்கு பின்னணியிலும், ”இலவசங்கள் வேண்டாம்” என்பதற்கு பின்னணியிலும் ஒளிந்து கொண்டிருப்பது ஒரே நோக்கம் தான்! அது முதலாளித்துவ வர்க்க நலன்களேயாகும். நாட்டின் நீதிமன்றங்களும் அந்தப் பார்வை கொண்டவை தாம்! ”இலவசங்கள் குறித்த ஆழமான விவாதம் தேவை” என உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. ”இலவச அறிவிப்புகளையும், மக்கள் நல வளர்ச்சி திட்டங்களையும் நாங்கள் பிரித்து பார்க்கவே விரும்புகிறோம்” என்றும் நீதிபதி ரமணா கூறியுள்ளார்.

“கிராமப்புற மாணவர்களுக்கு சைக்கிள் தரப்படுவதால் அவர்கள் கல்வி கற்று பயனடைவர். அது போல பிற்படுத்தப்பட்ட கிராம மக்களின் முன்னேற்றத்திற்காக கால்நடைகள் வழங்கப்படுகின்றது. 100 நாட்கள் வேலை திட்டம் அறிவிக்கப்பட்டு உள்ளது! இது போன்ற திட்டங்களை எல்லாம் கண்மூடித்தனமாக இலவசங்கள் என கூறவில்லை” என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தி உள்ளது. அதே சமயம் இலவசத்திற்கான சுமைகளை அரசுகள், பணக்காரர்கள் தலையில் ஒரு போதும் ஏற்றிவிடாது! அதிலும் பயன் பெறக் கூடியதாகவே முதலாளி வர்க்கம் உள்ளது. ஆகச் சுமையைப் பகிர்ந்து கொள்ள வேண்டியவர்களும் ஏழை, எளிய மக்கள் தான்!

சொலிசிடர் ஜெனரல் துஷார் மேத்தா வாதிடுகையில், “தேர்தல் பிரச்சாரத்தில் அரசியல் கட்சிகள் இஷ்டத்துக்கு இலவச அறிவிப்புகளை வெளியிடுவது பொருளாதார சீரழிவுக்கு வழி வகுக்கும். குறிப்பாக இலவச மின்சார அறிவிப்பால் மின் கழகங்கள் கடுமையான பொருளாதார பாதிப்பை சந்திக்கின்றன” என்றார். மத்திய அரசு சொலிசிடர் ஜெனரலின் இந்த வாதங்களின் பின்னுள்ள ஒரே நலன் தற்போது போது தனியார்மயமாகி மின்சாரத் துறையின் அதானி போன்ற மின் உற்பத்தியாளர்களின் நலன்களே!

அரசின் கொள்கை முடிவு, மக்கள் நலதிட்டம் என்ற பெயரில் அறிவிக்கப்படுவை யாவும் பொது நலன் சார்ந்தவையா? ‘டாஸ்மாக் கடைகள் மக்கள் வாழ்வை சூறையாடுகின்றன’ என நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தால், ”இது அரசின் கொள்கை முடிவு” என்று வாதிடப்படுகிறதே? அந்த பணத்தால் தான் மக்கள் நலத் திட்டங்கள் செய்கிறார்களாம்! அந்தப் பணம் ஏழைக் குப்பனிடமும், சுப்பனிடமும் உருவியது தானே! அவன் பெண்டாட்டி , பிள்ளைகளை பட்டினி போட வைத்து பிடுங்கப்பட்ட பணம் தானே! டாஸ்மாக்கால் யாருடைய கஜானா நிரம்புகிறது..? அரசாங்கம் பண்ணங்கள்ளை ஆதரித்தால் லட்சக்கணக்கான விவசாயிகள் பலனடைவர்களே!

ஏழ்மை தலைவிரித்தாடிய ஒரு காலகட்டத்தில் காமராஜர் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு திட்டம் கொண்டு வந்தார். இதனால் கூடுதல் பள்ளிகள் ஆங்காங்கே

திறக்கப்பட்டு அதிக மாணவர்கள் சேர்ந்தனர். இன்று பொருளாதாரம் நன்கு வளர்ந்த நிலையில் மதிய உணவு மட்டுமின்றி பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசங்கள் என்ற பெயரில் 14 விதமான பொருட்கள் வழங்கப்படுகின்றன! இதற்காக பல ஆயிரம் கோடிகள் கணக்கு எழுதப்படுகின்றன! ஆனால், அரசு பள்ளிகளில் ஆசிரியர் பற்றாக்குறை, தரமான கல்விக்கு உத்திரவாதமின்மை ஆகியவற்றால் ஆண்டுதோறும் மாணவர் சேர்க்கை குறைகின்றன. அதைக் காரணமாக்கி, நூற்றுக்கணக்கான அரசு பள்ளிகள் மூடப்பட்டு வருகின்றன. பெற்றோர்கள் கடனை வாங்கியாவது தனியார் பள்ளிகளில் குழந்தைகளை சேர்க்கிறார்கள்!

இந்த 14 இலவசங்களால் ஆட்சியாளர்களுக்கு வேண்டிய முதலாளிகள் பலடைகிறார்கள். அரசியல்வாதிகளும் ஆதாயம் அடைகிறார்கள்! தரமான கல்வி ஒரு அடிப்படை உரிமையல்லவா? தமிழகத்தில் கலைஞர் 2006 ஆம் ஆண்டு ஒரு கிலோ அரசி இரண்டு ரூபாய்க்கு ரேஷனில் போடப்படும் என தேர்தல் வாக்குறுதி தந்தார். அவர் வெற்றிக்கு அது முக்கிய காரணமாக பார்க்கப்பட்டது! ஆகவே, அடுத்த தேர்தலில் ஜெயலலிதா விலையில்லா அரசி திட்டத்தை தேர்தல் வாக்குறுதியாக அறிவித்தார். அதனால் வெற்றி சாத்தியமானதாக நம்பப்பட்டது.

மக்கள் இரண்டு ரூபாய்க்கோ அல்லது இலவசமாகவோ அரசி வேண்டும் என்றோ' எந்த கோரிக்கையும் வைக்கவில்லை. 'ரேஷனில் தரப்படுகின்ற அரசி பொங்கி சாப்பிடும் வகையில் தரமானதாக இருக்க வேண்டும்' என்பதே பெரும்பான்மையான மக்கள் எதிர்பார்ப்பாக உள்ளது. கருணாநிதி டெலிஷனை இலவசமாக அறிவித்தார்! அப்போது சன் டிவியும், கேபிள் இணைப்பை தரும் சுமங்கலி கேபிள் விஷனும் தன் நிகரற்ற செல்வாக்கோடு தமிழக தொலைகாட்சி துறையில் கோலோச்சிக் கொண்டிருந்தன! ஜெயலலிதா இலவச கிரைண்டர், மிக்சி, டேபிள் பேன் வழங்கினார். இவை வெகு சீக்கிரம் கயலான் கடைக்கு வந்தன! இவை யாவும் மக்கள் கோரிக்கை வைக்காத இலவசங்கள். ஓட்டு பொறுக்குவதற்காக தரப்பட்டவை!

**இலவசமாக மக்கள் எதிர்பார்ப்பது தரமான கல்வி, நல்ல மருத்துவம், உழைப்பதற்கான வாய்ப்பு ஆகியவையே!** இந்த மூன்றிலும் வரைமுறையில்லாமல் தனியார் கொழுக்கும் வகையில் தான் மத்திய, மாநில அரசாங்கங்கள் திட்டம் தீட்டி வருகின்றன! ஒரு பக்கம் முதலாளிகளை கொழுக்க வைத்து, மக்களை ஓட்டாண்டியாக்கி பார்க்கும் இவர்களுக்கு மக்களை கையேந்தும் நிலையில் தொடர்ந்து தக்க வைத்திருப்பதில் தான் அரசியல் எதிர்காலமே அடங்கியுள்ளது.

தனியார் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை ஊக்குவித்து 25% மாணவர்கள் கட்டணத்தை அரசே தருகிறது! இந்தப் பணத்தை ஏன் ஓராசியர் பள்ளிகளில் கூடுதல் ஆசிரியர்களை நியமிக்கவும், அரசு பள்ளிகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும் செலவிடுவதில்லை? இன்சூரன்ஸ் என்ர பெயரில் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை எடுப்பவர்களுக்கு அரசு செலவழிக்கும் பணம் அரசு மருத்துவமனைகளின் போதாமைக்கு செலவழிக்கலாம். ஏன் செய்வதில்லை?

தனியார் பெரு முதலாளிகளுக்கு வங்கி கடன் வாரித் தரப்படுகிறது. திருப்பித் தர முடியவில்லை எனில் தள்ளுபடி செய்யப்படுகிறது. ஆகவே, எளியவர்களுக்கு தரப்படும் கடன்களையும் திருப்பி கேட்காதே என்பது சரியான வாதமா? அது ஏற்கனவே அரசு தனியார் பலனடைய செய்து வரும் குற்றத்தை நியாயப்படுத்திவிடாதா? "அந்த தனியார் முதலாளிக்கு தரப்பட்ட கடன்களில் கறார்த் தன்மை வேண்டும். அதை வசூலித்து அரசு கஜானாவில் சேர்க்க வேண்டும்" என்பது தான் நமது கோரிக்கையாக இருக்க வேண்டும்.

ஆக, இலவசங்கள் வேண்டும் என்பதும் வேண்டாம் என்பதும் முதலாளித்துவ வர்க்க நலன் சார்ந்து செயல்படும் அரசாங்கத்தை பொறுத்த அளவில் ஒன்று தான். ஒரு மக்கள்

நல அரசு செய்ய வேண்டியது மக்களை வாங்கும் சக்தி மிக்கவர்களாக ஆக்குவது தான்! அதற்கு தடையாக இருக்கும் சுயநல சக்திகளை விலக்கி வைப்பது தான்! தற்போது இலவச மின்சாரத்தை அதானியின் வளர்ச்சிக்காக எதிர்க்கும் பாஜக அரசு உ.பி, மற்றும் குஜராத் தேர்தல்களில் எத்தனையெத்தனை இலவச அறிவிப்புகளை தந்துள்ளன.. எனப் பார்க்க வேண்டும்.

இயற்கை தேவைக்கும் அதிகமாகவே மனிதகுலத்திற்கு அள்ளித் தருகிறது! மொத்த நிதிவள ஆதாரங்களில் 90 சதமானவற்றை பத்து சதவிகிதற்கும் குறைவானவர்கள் அபகரித்து வைத்துள்ளனர்! மிச்ச பத்து சதமானவற்றை 90 சதமான மக்கள் பெற்றுக் கொள்வதும் கூட அந்த செல்வந்தர்களை சார்ந்து தானே உள்ளது. அது தான் தகர்க்கப்பட வேண்டும்.

மக்கள் சுய சார்ப்போடு சுதந்திரமாக வாழ உத்திரவாதம் இருந்தலே போதுமானது. சிறு, குறுந்தொழில்கள் பாதுகாக்கப்பட வேண்டும். பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் உழைப்பதற்கான கை, கால்களுடனும், தன்னைத் தான் தற்காத்துக் கொள்ளும் அறிவுடனும் தான் பிறக்கிறான். மக்கள் அரசாங்கத்தையோ, தனியொரு முதலாளிகளையோ சார்ந்து இல்லாமல் வாழும் உத்திரவாதத்தை பாதுகாப்பது தான் மக்கள் நல அரசு செய்ய வேண்டியதாகும்!

---

## டவரைத் (Cell Phone Tower) திருடிய நபர்கள்

சில நாள்களுக்கு முன்பு சம்பந்தப்பட்ட செல்போன் நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர்கள் பராமரிப்புப் பணிக்காக செல்போன் டவர் அமைந்திருக்கும் இடத்துக்குச் சென்று பார்த்தபோது, இடம் வெறிச்சோடிக் கிடந்திருக்கிறது.

சேலம், வாழப்பாடி அருகே மேட்டுப்பட்டி கிராமத்தில் தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான செல்போன் டவர் அமைக்கப்பட்டிருந்தது. கடந்த மாதம் அங்கு வந்த கும்பல் ஒன்று, காவலாளியிடம் சில ஆவணங்களைக் காண்பித்து செல்போன் டவர் செயலற்றுப்போனதாகத் தெரிவித்துள்ளனர். பின்னர் செல்போன் டவரை கிரேன் கொண்டு கழற்றி திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த சில நாள்களுக்கு முன்பு சம்பந்தப்பட்ட செல்போன் நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர்கள் பராமரிப்புப் பணிக்காக செல்போன் டவர் அமைந்திருக்கும் இடத்துக்குச் சென்று பார்த்தபோது, இடம் வெறிச்சோடிக் கிடந்திருக்கிறது. இதனைக் கண்ட பணியாளர்கள் அதிர்ச்சியடைந்து, நிறுவனத்தின் மேலாளர் தமிழரசனிடம் தகவல் தெரிவித்திருக்கிறார்கள்.

அதன் பிறகு தமிழரசன் வாழப்பாடி காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிந்து போலீஸார் விசாரணை நடத்திவந்தனர். இந்நிலையில் அந்தப் பகுதியிலுள்ள சிசிடிவி கேமராக்களை ஆய்வுசெய்ததில் திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி பகுதியைச் சேர்ந்த நாகமுத்து, தூத்துக்குடி மாவட்டம் ஆழ்வார் திருநகரி பகுதியைச் சேர்ந்த சண்முகம், சேலம் மாவட்டம் வாழப்பாடி காமராஜர் நகரைச் சேர்ந்த ராகேஷ் சர்மா ஆகியோரைக் கைதுசெய்தனர்.

**நேர்மை நெறியில் குறைந்த செலவில் விளம்பரம் செய்து பயன் பெருவீர்!**

**விளம்பரக்கட்டண விவரம்**

**முழுப்பக்கம் ரூ 2000/-; அரைப்பக்கம் ரூ 1000/-; கால் பக்கம் ரூ 500/-.**

**இதழில் வருகின்ற கட்டுரைகள், விளம்பரங்கள் படைப்பாளியையே சார்ந்தது நேர்மை நெறி நிர்வாகிகளோ , ஆசிரியரோ பொறுப்பல்ல**

# சமூக பேரழிவைத் தரும் ஆன் லைன் ரம்மியில் சமரசமா..?

***-ம.வி.ராஜதுரை***

August 20, 2022

***ஆன்லைன் ரம்மி விளையாட்டுகளால் அடிக்கடி நடக்கும் இளைஞர்களின் தற்கொலைகள், குடும்பங்கள் நிலை குலைந்து நடுத் தெருவுக்கு வந்து நிற்கும் அவலம்.. என பல கொடூர விளைவுகள் நாள்தோறும் அரங்கேறி வருகின்றன. தமிழக அரசு இந்த சூதாட்டத்தை தடை செய்யுமா? அல்லது தடுமாறுமா..?***

ஆன்லைன் ரம்மி விளையாட்டுகளால் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் சீரழிந்து கொண்டிருக்கின்றன. ஆயினும் இது, திறமைக்கான விளையாட்டு என்ற போர்வையில் ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளுக்கு அனுமதி பெற்று பல்லாயிரம் மக்களின் வாழ்க்கையில் விளையாடிக் கொண்டிருக்கின்றன ஆன்லைன் ரம்மி நடத்தும் அந்நிய நாட்டு நிறுவனங்கள் நூற்றுக்கும் மேற்பட்ட ரம்மி சூதாட்ட செயலிகள் தற்போது செயல்பாட்டில் உள்ள போதிலும், நான்கைந்து செயலிகள் அதிகம் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஒருவர் ரம்மி விளையாட செயலிக்குள் நுழைந்ததும் அவருக்கு ஒரு ஊக்கத்தொகை கிடைக்கிறது. இந்த போனஸ் என்பது மீனுக்கு தூண்டிலில் வைக்கப்படும் புழு போன்றது.

பையில் இருக்கும் பணத்தை எடுக்காமலே இந்த போனசை வைத்து முதலில் விளையாட வைக்கிறார்கள். முதல் விளையாட்டில் வெற்றி கிடைக்கும். அந்த வெற்றியின் மூலம் கிடைக்கும் பணத்தை வங்கிக் கணக்கிலும் மாற்றிக் கொள்ள முடியும். பத்தாயிரம் ரூபாய் திடீர் என தன் வங்கி கணக்குக்கு வந்தால் எப்படி இருக்கும்.?

இந்த பத்தாயிரம் , பத்து லட்சமாக பத்து கோடியாக ஆனால் எப்படி இருக்கும்.?

இப்படி கனவு காண வைப்பார்கள். அடுத்ததாக சிறிய வெற்றி, சிறிய தோல்வி, இப்படி போகும் விளையாட்டு. கடைசியில் தோல்வி மயம் தான். கையில் இருக்கும் பணத்தை மட்டும் அல்ல, கடன் வாங்க வைத்தும் உறிஞ்சி விடுவார்கள்! இழந்த பணத்தை மீட்டே ஆக வேண்டும் என்ற வெறித்தனம் ஏற்படும். பொய் சொல்லி உறவினர்களிடம் நண்பர்களிடமும் பெரிய தொகைகளை கடன் வாங்குவார்கள். அனைத்தும் காலியாகும். ஒரு கட்டத்தில் இருபது லட்சம் முப்பது லட்சம் என்று சக்தியை மீறிய கடன் நெருக்கடிக்கு ஆளாகி தற்கொலை முடிவை நாடுவார்கள்.







புதுவை விஜயகுமார், விழுப்புரம் பச்சையப்பன், உள்பட ஏராளமானோர் இப்படி பலியாகி விட்டனர். இந்த விளையாட்டில் ஏமாந்து தன்னைத்தானே சுட்டுக் கொண்டார் சென்னையில் பணியாற்றி கொண்டிருந்த போலீஸ்காரர் வேலுச்சாமி. சூதுக்கு ஆட்பட்டு கையறுந்த நிலையில் உள்ள காவலர்களே நூற்றுக்கணக்கில் இருப்பார்கள். பாதிக்கப்பட்ட குடும்பங்களில் ஏழை, எளிய நடுத்தர மக்கள் அதிகம் என புள்ளி விவரம் கூறுகிறது.கடலில் மிதக்கும் பெரிய ஐஸ் கட்டி போல வெளியில் தெரியும் பாதிப்பு கொஞ்சமே.,!

தமிழகத்தில் இந்த ஆன்லைன் ரம்மி விளையாட்டுகளை தடை செய்ய வேண்டும் பல போராட்டங்களை தொடர்ந்து நடத்தி வருகிறது பாட்டாளி மக்கள் கட்சி! "சூதாடிகள் ஒன்றைப் பெற்று நூறை இழந்து விடுவார்கள். நன்மையைப் பெற்று வாழ்வதற்குப் பிறகு ஒரு வழியும் இல்லாமல் போய்விடும்" என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் எச்சரித்தார்.

**"ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கோல்**

**நன்றெய்தி வாழ்வதோர் ஆறு"(குறள் 932).**

வள்ளுவர் முதலாக ஆன்றோர் பலர் எச்சரித்தும், விட்டில் பூச்சிகளாய் சூதுக்கு பலியாவது காலம் காலமாக தொடர்ந்து கொண்டே இருக்கிறது. ஆன்லைன் சூதாட்ட விளையாட்டு வந்த பிறகு நிலைமை ரொம்ப மோசம்.!

இந்த விளையாட்டு குறித்து சைபர் கிரைம் அதிகாரியிடம் கேட்டபோது, "எதிர்முனையில் விளையாடுவது மனிதர்களே அல்ல, ரோபோட்டுக்கள் தான். எவ்வளவு திறமைசாலிகளாக இருந்தாலும் வெற்றி பெற முடியாத அளவுக்கு அந்த ரோபோட்டுகள் வடிவமைக்கப்பட்டு இருக்கின்றன" என்றார். கண்ணுக்குத் தெரிந்து ஆன்லைன் ரம்மி என்னும் அரக்கன் அப்பாவி மக்களின் வாழ்க்கையை சூறையாடிக் கொண்டிருக்கும் போது, உடனடியாக தடுத்து நிறுத்தாமல் தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் இவ்வளவு தூரம் காலம் தாழ்த்துவது ஏன்? என்ற ஆதங்கம் சமூக ஆர்வலர்கள் மத்தியில் எழுந்து நிற்கிறது.

அதிமுக ஆட்சியில் இயற்றப்பட்ட சட்டம் நீதிமன்றத்தில் செல்லுபடியாகவில்லை. மேலும், இப் பிரச்சினையில் மத்திய அரசின் ஒத்துழைப்பு அவசியம் என்று கூறப்படுகிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு தமிழக அரசு வலுவான முன்னெடுப்பை மேற்கொள்ள வேண்டும்.

பிரபல நடிகர்கள், நடிகைகள், கிரிக்கெட் வீரர்கள் ஆன்லைன் சூதாட்டத்தை ஊக்குவிக்கும் விளம்பரங்களில் நடிப்பது தொடர்பாக சமூக வலைதளங்களில் கடுமையான விமர்சனங்கள் செய்யப்படுகின்றன. "இவர்கள் விளம்பரங்களில் நடிப்பதால் லட்சக்கணக்கான இளைஞர்கள் இந்த சூதாட்டப் படுகுழியில் விழுந்து அழிகிறார்கள்" என பல வழக்குகள் கோர்டில் நடக்கின்றன! தங்களை நேசிக்கும் ரசிகர்களுக்கு இந்தப் பேரழிவை ஏற்படுத்தலாமா..? என சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் மனசாட்சியைத் தொட்டு சிந்திக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகளை தடை செய்வது தொடர்பாக நீதியரசர் சந்துரு தலைமையில் கடந்த ஜூன் 10 ஆம் தேதி குழுவை அமைத்த முதல் அமைச்சர் ஸ்டாலின், இந்த விளையாட்டால் சமூக பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள், சூதாட்ட விளையாட்டுகளை விளையாடத் தூண்டும் விளம்பரங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் உள்ளிட்ட விவரங்களை உரிய ஆதாரங்களுடன் தரும்படியும் அதோடு இந்த சூதாட்டத்தை தடுப்பதற்கான சட்ட ஆலோசனைகளையும் வழங்கும்படி கேட்டுக் கொண்டார். நீதியரசர் சந்துரு தம் விரிவான அறிக்கையை ஜூன் மாதம் 27ஆம் தேதி அரசிடம் வழங்கினார். அந்த அறிக்கையில், ஆன்லைன் சூதாட்டங்கள் ஏற்படுத்தியுள்ள கொடூர பாதிப்புகளையும், அவற்றைத் தடுப்பதற்கான சட்ட ஆலோசனைகளும் கூறப்பட்டு இருப்பதாக தெரிகிறது. இந்த அறிக்கை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்றது.

இது தவிர, homesec@gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக பொதுமக்கள், தன்னார்வலர்கள், ஆன்லைன் விளையாட்டு நடத்தும் நிறுவனங்களின் நிர்வாகிகள் ஆகியோரின் கருத்துக்களையும் தமிழக அரசு கேட்டுப் பெற்றுள்ளது. தமிழக அரசின் தலைமைச் செயலாளர் இறையன்பு கடந்த மாதம் 30 ஆம் தேதி இந்த விவகாரம் தொடர்பாக உயர் அதிகாரிகளுடன் விரிவான ஆலோசனை மேற்கொண்டார்.

இவ்வளவு முன்னேற்பாடுகளுக்குப் பிறகு முதலமைச்சரின் மு .க. ஸ்டாலின் தலைமையில் கோட்டையில் ஆகஸ்ட் 18 அன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் சட்ட அமைச்சர் ரகுபதி, தலைமைச் செயலாளர் இறையன்பு, உள்துறைச் செயலாளர் பணீந்தர் ரெட்டி, டிஜிபி சைலேந்திர பாபு உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பங்கேற்றனர். அப்போது என்ன முடிவு எடுக்கப்பட்டது எனத் தெரியவில்லை. இக் கூட்டத்தை தொடர்ந்து ஆன்லைன் சூதாட்டத்தை கட்டுப்படுத்தும் வகையில் அவசர சட்டம் பிறப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அப்படிப்பட்ட நடவடிக்கை எதுவும் இல்லை.

தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி இப்பிரச்சினை தொடர்பாக தொடர்ந்து தமிழக அரசை விமர்சனம் செய்து வருகிறார். கடந்த 18ஆம் தேதி முதலமைச்சர் கோட்டையில் ஆலோசனைக் கூட்டம் நடந்தபோதும் அதே விமர்சனத்தையும் கேள்வியையும் தான் முன்வைத்தார். “சூதாட்டம் பொதுமக்களை பாழ் படுத்துவது, அது தடுக்க வேண்டியது என்று உலகில் யாரை கேட்டாலும் சொல்வார்கள். அதற்கு எதுக்கு கருத்து கேட்பு, இவ்வளவு காலதாமதம்.? இது செயல்படாத அரசு என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம்” என்று சொல்லி நகைத்தார்.

மத்தியில் உள்ள அரசாங்கம் இதில் 28 சதவிகித ஜி.எஸ்.டி வரி போட்டு வருமானம் பார்க்கவே வழி வகை செய்துள்ளது. ”இதை மத்திய அரசே தடுத்துவிட்டால் மிகவும் நல்லது” என பல மாநிலங்களின் முதல்வர்கள் மத்திய அரசுக்கு கடிதங்கள் எழுதியும் பயனில்லை. கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் இந்த ஆன்லைன் சூதாட்டத்திற்கு தடை சட்டம் கொண்டு வந்தன. ஆனால், அந்த சட்டத்தை நீதிமன்றம் சென்று செல்லாமல் ஆக்கிவிட்டன ஆன்லைன் சூதாட்ட நிறுவனங்கள்!

ஆன போதிலும், இந்தியாவில் தெலுங்கானா, ஆந்திரா மேகாலயா போன்ற மாநிலங்கள் தங்கள் மாநிலத்தில் இதை தடை செய்துள்ளன. மீறி விளையாடுபவர்களுக்கு பெரும் அபராதமும், தண்டனையும் தருகின்றன! இதன் மூலம் அங்குள்ள இளைஞர்கள் கணிசமான அளவில் பாதுகாக்கப்பட்டு உள்ளனர். சமீபத்தில் கேரளாவில் அடுத்தடுத்து என 20 தற்கொலைகள் நடந்துவிட்ட நிலையில் ஆன்லைன் சூதாட்டத் தடுப்பு சட்டத்தை மீண்டும் விரைவில் கொண்டு வர உள்ளதாக கேரள அரசு தெரிவித்து உள்ளது. நீதிமன்றங்களும் இதில் மக்கள் மீது கருணை காட்ட வேண்டும்.

நமது அறம் இதழில் இது குறித்து சென்ற ஆண்டே ஒரு விரிவான கட்டுரை வெளியிட்டோம்.

**<u>சூது கவ்வும் ஆன்லைன் விளையாட்டுகளும், சூனியக்கார அரசுகளும்!</u>**

தமிழக அரசு இதையெல்லாம் கருத்தில் கொண்டு துரிதமாக செயல்பட வேண்டும். ஆன் லைன் ரம்மி சூதாட்டத்தால் ஏற்படும் பாதிப்புகளுக்கு ஏற்ப எதிர்வினை ஆற்ற வேண்டும். சூதாட்ட அரக்கனின் கோரப்பிடியில் இருந்து மக்களை விரைந்து விடுவிக்கும் வகையில் நீதிபதி சந்துரு தலைமையிலான குழுவின் பரிந்துரைப்படி வலுவான சட்டத்தை இயற்ற வேண்டும். இதில் தயக்கமோ, தடுமாற்றமோ கூடாது. குடும்பங்களை சின்னா பின்னமாக்கும்”ஆன்லைன் ரம்மி” அரக்கனிடம் இருந்து மக்களை உடனே காப்பாற்றுங்கள் தமிழக முதல்வரே!

**இயக்கத்துடன் தொடர்பு கொள்ள:**

| | | |
|---|---|---|
| | திரு **N** சுப்ரமணியன், தலைவர் | **: 9444274352** |
| | திரு **V** கார்த்திகை ராஜன், பொதுச்செயலாளர் | **: 87783 12823** |
| | திருமதி பாக்யலட்சுமி, மேலாளர் | **: 90031 25142** |
| **E- Mail** | **: acmchennai2001@yahoo.co.in** | |
| **Website** | **: anticorruptionchennai.com** | |

# இதுதான் தலைவிதி என்பதா?

## *மதுரையில் ஒரு வங்கிக் கிளையில் நடக்கிற கற்பனை உரையாடல்*

"சார், அந்த சிங்காரத்தோட டெபாசிட் எல்லாத்தையும் நம்ம Head office-ல unclaimed deposit-ஆ மாத்திட்டாங்க சார்"

"ஆமாம்பா, அதுதான் பேங்க் பாலிசி. Claim செய்யப்படாத டெபாசிட்டுக்கெல்லாம் அதே கதி".
"அப்போ.... எதிர்காலத்தில் ஒரு நாள் அவருடைய வாரிசுகள் வந்து கேட்டால் எப்படி சார் எடுப்பது?"

"வாரிசுகள் எல்லா டாக்குமெண்ட்டும் கொடுத்து, அவை சரியாகவும் இருந்தால், ஹெட் ஆபீசுக்கு அனுப்பி அந்தப் பணத்தைத் திரும்பப் பெற்று அவர்களுக்குக் கொடுத்து விடலாம்."

மதுரையில் ஒரு வங்கிக் கிளையில் நடக்கிற இந்த உரையாடலை நான் மேலிருந்தபடியே கவனித்துக் கொண்டிருந்தேன். நான் தான் அந்த சிங்காரம்.
மேலிருந்து? ஆமாம், மேலே இருந்துதான். நான் பூலோகத்தை விட்டுப் பத்து வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டன. லோக கணக்கில் 10 வருடம். பத்து நாள் என்று தான் இங்குள்ள கணக்கு.

இப்போது நான் இருப்பது சொர்க்க பூமி இல்லை. நரக லோகமும் இல்லை. விஷ்ணு லோகமும் இல்லை. இது என்ன லோகம் என்று எனக்கே தெரியாது. மறுபிறவி எடுக்க வேண்டியவர்கள் இங்குதான் இருப்பார்களாம். இன்னும் எவ்வளவு காலம் இங்கு இருக்க வேண்டும் என்று தெரியவில்லை.

என்னைப் போல் பூலோகத்தில் வாழ்க்கையை முடித்தவர்கள் பலர் இங்கே இருக்கிறார்கள். என் மனைவியும் கூட. நான் 'போய்' மூன்று வருடங்களுக்குப் பிறகு அவளும் 'போய்'ச் சேர்ந்தாள். அதாவது இங்கு வந்து சேர்ந்து விட்டாள்.

இது ஒரு parking place என்று நினைக்கிறேன். மறுபடியும் பூலோகத்தில்தான் பிறக்கப் போகிறேனா, அப்படியே பிறந்தால் மனிதனாகப் பிறப்பேனா, மாடாகப் பிறப்பேனா, சிங்கமாகப் பிறப்பேனா, புழு பூச்சியாகப் பிறப்பேனா...... எதுவும் எனக்கு இப்பொழுது தெரியாது. எனக்குத் தெரிந்தால் தான் உங்களுக்கு சொல்ல முடியும். அதுவரை பொறுக்கவும்.

யம கிங்கரர்கள் அங்கும் இங்கும் உலாவிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஓரிருவருக்கு நான் இப்போது நண்பன். நான் சூசகமாக விசாரித்த வரை, எம தர்மராஜன் இன்னும் முடிவெடுக்கவில்லையாம். என்ன காரணம் என்று தெரியவில்லை. அதுவரைக்கும் இந்த ரெண்டுங்கெட்டான் லோகத்தில் வெயிட்டிங்.

அந்த வங்கியில் உள்ள டிபாசிட்டுகள் என்னுடையது தான். எங்கள் இருவர் பேரில் இருந்தன. நான் 'போன' பிறகு என் மனைவி தான் அவற்றுக்குச் சொந்தக்காரி. இப்பொழுது அவளும் 'போய்'ச் சேர்ந்து விட்டபடியால் என் மகனும் மகளும் தான் ஜாயிண்ட் சொந்தக்காரர்கள். அதாவது..... Joint Nominees.

என் மகன் புதுடில்லியில் சகல வசதிகளுடன் வாழ்கிறான். மகள் திருமணமாகி ஜெர்மனியில் எங்கோ செட்டிலாகிப் பல ஆண்டுகள் கழிந்து விட்டன.

மகன் அந்த வங்குக்கு சென்று என்னுடைய டெபாசிட்களை Claim செய்தான். ஜாயிண்ட் நாமினேஷன் ஆனபடியால் அண்ணன் தங்கை இருவருடைய KYC papers-உம் கேட்டார்கள். என் மகளுக்கும் அவளுடைய கணவனுக்கும் இதில் எந்த அக்கறையும் இல்லை. அவளுக்குத் தன் அண்ணனுடன் தொடர்பும் இல்லை. பிறகு என்ன செய்வது?

நான் ஏன் இவ்வளவு பணத்தை அப்படியே விட்டு விட்டு இறந்து போனேன் என்று தெரியவில்லை. என் வாழ்நாளில் நானே அனுபவித்துவிட்டுப் போயிருக்கலாமோ என்று இப்பொழுது தோன்றுகிறது.

ஏழைக் குழந்தைகளுக்கும் அனாதைகளுக்கும் முதியோர் இல்லங்களுக்கும் என்னால் முடிந்த உதவிகளைச் செய்யவில்லை.

வேத பாடசாலைகளுக்கும் கோசாலைகளுக்கும் உதவி செய்யவில்லை.. சிறிய கோவில்களுக்குத் திருப்பணிக்குப் பண உதவி செய்யவில்லை....

இவ்வளவு பணம் இன்று கேட்பாரற்றுக் கிடக்கிறது. குறைந்தது, அந்தப் பழைய காரை விற்றுப் புதிய கார் வாங்கி நான் அனுபவித்திருக்க முடியும். ஆனால் செய்யவில்லை. வீட்டில் உள்ள பழைய பொருட்களை போட்டு புதிய பொருட்களை வாங்கி இருக்க முடியும். ஆனால் செய்யவில்லை.

ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது உலகச் சுற்றுலா சென்று வந்திருக்க முடியும். ஆனால் செய்யவில்லை. நானும் அனுபவிக்க முடியவில்லை. இப்போது என் சந்ததியினரும் அதை அனுபவிக்கவில்லை.

***வங்கி அனுபவித்துக் கொண்டிருக்கிறது! என்னைப் போல் ஆயிரமாயிரம் பேர் தாங்கள் சேர்த்து வைத்த பணம் இப்படித்தான் வங்கிகளில் கிடக்கிறது.***

***இதே போலத்தான் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலும் கூட. Unclaimed policy மற்றும் lapsed policy-களில் எத்தனையோ கோடி ரூபாய் கேட்பாரற்றுக் குவிந்து கிடக்கிறது!***

நான் கஷ்டப்பட்டு வியர்வை சிந்திச் சம்பாதித்துச் சேர்த்த சேமிப்புக்குத் தான் இந்த கதி என்றால், மதுரையில் நான் வசித்த அதிநவீனக் குடியிருப்பும் இப்படியே கேட்பாரற்றுக் கிடந்தது. unclaimed property ஆகிவிட்டது.

இந்தச் சொத்தை மீட்க யாரும் வரமாட்டார்கள் என்று உறுதி செய்து கொண்ட பிறகு அந்த builder அந்த வீட்டுக்கு ஒரு புது விற்பனைப் பத்திரம் தயார் செய்து கதவு எண் 20 என்பதை 20அ என்று மாற்றி இன்னொருவருக்கு விற்று விட்டார்! நான் சாவதற்கு முன்பே அதை விற்றுப் பணமாக்கி இருக்கலாம். குறைந்தது ரூபாய் 50 லட்சம் கிடைத்திருக்கும். இன்று அதற்கு மார்க்கெட் விலை ஒரு கோடிக்கு மேல்.

அந்த வீட்டை மகன் பெயருக்கு மாற்றி, பதிவு செய்திருக்கலாம். ஆனால் ஏனோ, நான் அதை செய்யவில்லை. என் கண் முன்னே கஷ்டப்படும் உறவினர்களுக்காவது அதை எழுதி வைத்திருக்கலாம். ஆனால் அதையும் செய்யத் தவறி விட்டேன்.

ஆயிரமாயிரம் பேர் என்னைப் போலவே தங்கள் சொத்துக்களை அப்படியே அனாமதேயமாக

விட்டு விட்டுப் போயிருப்பார்கள். கொஞ்ச காலத்திற்குப் பிறகு அவற்றை யாராவது அபகரித்துக் கொண்டு விடுவார்கள்.

இதுதான் தலைவிதி என்பதா? அடுத்த பிறவியில் மனிதனாகப் பிறந்தாலும் கூட இவற்றை நான் மீண்டும் அடைய முடியாது. புதிய பிறவி எடுத்த உடனேயே பழைய பிறவியின் நினைவுகள் மறந்து போய் விடுமாம்.

இதற்கு என்ன தீர்வு? யாரிடமாவது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

*வாய்ப்புக் கிடைத்தால் எமதர்மராஜனிடமே கேட்டு விடுகிறேன். என்ன சொல்கிறார் பார்ப்போம்.* யாரோ கிங்கரர் என்னைக் கூப்பிடுகிறார். உள்ளே போகுமாறு கட்டளை இடுகிறார். உள்ளே யம தர்பார்.

சரி, விடைபெறுகிறேன். உள்ளே போய் விஷயம் அறிந்து கொண்டு உங்களை மீண்டும் சந்திக்கிறேன்.

---

# ஊழல் எதிர்ப்பு இயக்கம் சென்னை

## <u>பொது குழுக்கூட்டம் (04-09-2022)</u>

1. நமது இயக்கத்தின் 20-வது பொதுகுழுக் கூட்டத்தின் (10-07-2022) தொடர்ச்சியாக இன்று (04-09-2022) கடவுள் வாழ்த்துடன் தலைவர் தலைமையில் பொதுக்குழு தொடங்கியது. பொதுகுழு கூட்டத்திற்கு 27 உறுப்பினர்கள் மட்டுமே கலந்துக் கொண்டனர். இப்பொதுக்குழுவுக்கு உரிய கோரம், (quorum) அதாவது 50 உறுப்பினர்கள் வரவில்லை. இருப்பினும் இது இரண்டாம் முறையாக நடத்தப்படுவதினால், கோரம் (quorum) தேவையற்றதாகிறது.. பொது செயலர் வரவேற்புரை வழங்கினார். அடுத்து தலைவர் உரை ஆரம்பமானது.
2. தலைவர் ,தமது உரையை துவங்கும் போது. திரு ராமலிங்கம் அவர்கள் இடை மறித்து, தலைவர் பொதுக்குழு கூட்டம் நடைபெறுமுன் சில தகாத வார்த்தைகள் கூறினார் என்றும் அதற்கு விளக்கம் அளிக்குமாறு கேட்டார்.. திரு மனுராஜ் தலைவரானதைப் பற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டன. தலைவரின் நியமனம் 30-07-2022 அன்று நடந்த செயற்குழுக் கூட்டத்தில் விவாதித்து முடிவு எடுக்கப்பட்டதை பொது செயலாளர் விளக்கிக் கூறவும் அது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தலைவராகப் பொறுப்பேற்றிருந்த திரு மனுராஜ் அவர்கள் மன்றத் தகாமைக்கு ஒவ்வாத சில (unparliamentary words) சொற்களை உபயோகித்தார் என திரு மகாலிங்கம் குறிப்பிட, திரு மனுராஜ் அதற்கு விளக்கம் கூற மறுத்துவிட்டு, தான் தலைவர் பதவியிலிருந்து ராஜினாமா செய்வதாக கடிதம் கொடுத்துவிட்டு இறங்கிவிட்டார்.
3. “கூட்டத்தில் யாராவது தலைமை தாங்கி நடத்த விருப்பமா?” என்ற கேள்வி வந்த போது, திரு நபீஸ் அஹமத் அவர்கள் தலைமை தாங்க முன்வந்தார். அவரது உரையில், தான் இந்த இயக்கத்தின் நீண்ட நாள் உறுப்பினர் என்றும், இயக்கத்தின் செயலாளர் பதவி வகித்திருந்ததாகவும் கூறினார். முன்னாள் தலைவர் திரு அரசு அவர்கள் தொடங்கிய “ மக்கள் நல் வாழ்வுக்கட்சி” யில் சேரும் பொழுது செயலாளர் பொறுப்பிலிருந்து விலகினதாகக் கூறினார். தற்பொழுது தான் அந்த அரசியல் கட்சியிலிருந்து விலகி விட்டதாகவும் எடுத்துரைத்தார். கூட்டத்தை நடத்த யாரும் முன்வராததினால், தான் முன்வந்ததாகவும் குறிப்பிட்டார்.
4. பொது செயலர் திரு.வே. கார்த்திகைராஜன் 2021-2022 க்கான ஆண்டறிக்கையை அறிவித்தார். .இரண்டு ஆண்டுகளாகக் கொரனாவால் பொதுகுழுகூட்டம் நடைபெறாததற்கு

வருத்தம் தெரிவித்தார். 2021-2022 ம் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட ஆண்டறிக்கையை விவரித்து பேசினார். நேர்மை நெறி இதழ் வெளியிடுவதற்கான தேவையான ஆ.என்.ஐ.ன் (RNI) ஒப்புதல் இதுவரை கிடைக்கவில்லை என்று கூறினார். அமைச்சர் செந்தில் பாலாஜி மீது ஊழல் வழக்கு பற்றி உரையாற்றினார்

5. அடுத்துப் பேசிய மாவட்ட செயலர் திரு.எம்.கலியப்பெருமாள் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் உள்ள புறம்போக்கு நிலங்களை, செல்வந்தர்கள் ஆக்ரமிப்பதாகவும், அவற்றில் அவர்கள் சாகுபடி செய்வதைப்பற்றி பற்றி உரையாற்றினார். பக்கத்து மாவட்டங்களில் உள்ள நம் உறுப்பினர்களும் உறுதுணையாக வர வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். இந்த நாட்டில் ஊழல் இல்லாமல் எதுவும் நடக்காது என்ற நிலைமை வந்துள்ளது என்றும் கூறினார்.

6. அடுத்துப் பேசிய திருவள்ளுவர் மாவட்ட உறுப்பினர் திரு. சுப்ரமணியன் அவர்கள் நமது இயக்கத்தின் பெருமைகளை விளக்கி வாழ்த்தினார். அனைத்து உறுப்பினர்களும் மதிப்புடனும், மரியாதையுடனும் ஒற்றுமையாக செயல்பட வேண்டுமெனக் கூறினார். இயக்கத்தின் அடையாள அட்டையில் முன்னேற்றம் கொண்டுவர வேண்டுமென கோரிக்கை வைத்தார்.

7. அடுத்ததாகப் பேசிய தஞ்சை மாவட்ட உறுப்பினர் திரு.குணசேகரன் அவர்கள், அவர் உரையாற்றும் போது தன்னுடைய பணிகாலத்தில் நேர்மையாக இருந்ததால் ஏற்பட்ட துன்பங்களைப் பற்றி விவரித்தார். நமது இயக்கத்திற்கு குறைந்தது ஆயிரம் உறுப்பினர்கள் சேர்க்க வேண்டுமெனவும் தமிழ் நாட்டின் அனைத்து மாவட்டங்களின் பங்களிப்பு அவசியம் என்றும் விளக்கினார். இயக்கம் மிகுந்த உயிரோட்டமாக எப்பொழுதும் இருக்க வேண்டுமெனெ உரையாற்றினார். ஊழலை எதிர்த்து நாம் தொடர்ந்து போராட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். பொதுநல வழக்குகள் தொடர்ந்து பதிவு செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தினார்.

8. அடுத்துப் பேசிய வேலூர் மவட்ட (அரக்கோணம்) உறுப்பினர் திரு அக்னி பாலக் தமிழ் நாடு மின்வாரியத்திலுள்ள சில ஊழல்களை விவரித்தார். முடிவில் நமது இயக்கத்தை வாழ்த்தி விடை பெற்றார்

9. அடுத்துப் பேசிய திருச்சி மாவட்டத் தலைவர் திரு.எம்.சுதாகர் ஏசுவடியான் அவர்கள் நமது இயக்கத்தின் வலைதளத்தில் உள்ள குறைகளை சரிசெய்யுமாறு வேண்டிக்கொண்டார் இயக்கத்தின் உறுப்பினர்களை அதிகமாக்கி,, அதிக மாவட்டங்களில் கிளைகள் அமைக்க வலியுறுத்தினார்.

10. அடுத்ததாக கோவை மாவட்ட செயலர் திரு. வேலு அவர்கள் உரையாற்றினார். அவர் இயக்கத்துக்கு வாழ்த்துகள் வழங்கி மென்மேலும் தொடர்ந்து பிரபலமாக வேண்டுமென .வாழ்த்தினார். அதே மாவட்ட உறுப்பினர் கந்தசாமி அவர்கள் நமது இயக்கம் அடைந்த வெற்றிகளை எடுத்துரைத்தார். நமது மாவட்ட அலுவலர்கள் ஊழல் புகார் குற்றங்களைப் பற்றி அந்தந்த அதிகாரிகளிடம் இடைவிடாது கேள்விகள் கேட்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

11. அடுத்தபடியாக, நம் இயக்க உறுப்பினர்கள் அனைவரும், தலைவர் தலைமையில் ஊழல் எதிர்ப்பு உறுதிமொழியை வாசித்து உறுதி ஏற்று கொண்டனர். நமது இயக்கத் துணைத் தலைவர் வருகை புரிந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். முடிவில், நாட்டுபண்ணுடன் இந்த வருட பொதுகுழுக்கூட்டம் இனிதே முடிவுற்றது.

V. ஐயப்பன்
துனைத் தலைவர்

V கார்த்திகை ராஜன்
பொதுச் செயலாளர்

## செயற்குழுக் கூட்டம் (09-09-2022)

இன்று (09-09-2022) நமது இயக்கத் துணைத்தலைவர் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், பொது செயலாளர், நான்கு செயலாளர்கள். சட்ட ஆலோசகர் மற்றும் ஒரு சிறப்பு அழைப்பாளரும் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றபட்டன.

1. சென்ற பொதுக்குழுக் கூட்டம் ஜூலை 10ம் தேதி பாண்டியன் ஹோட்டலில் நடைபெற்றது. அங்கு உறுப்பினர்களின் வருகை மிகவும் (quorum) குறைவாக இருந்ததால், அந்தப் பொதுக்குழுக் கூட்டம் மீண்டும் 04-09-2022 அன்று நமது தலைமை அலுவலகத்தில் நடத்தப்பட்டது. பொதுக்குழுக் கூட்டம் தொடங்கும் போது, திடீரென்று திரு மனுராஜ் அவர்கள் தலைவர் பதவியை ராஜினாமா செய்ததால், அன்றைய பொதுக்குழுவை திரு நபீஸ் அஹமத் அவர்கள் தலைமை தாங்கி நடத்தினார்.

2. இதைப்பற்றி, நமது இயக்கத்தின் சட்ட ஆலோசகர் கீழ்க்கண்டவாறு கருத்து தெரிவித்தார். "திரு நபீஸ் அவர்கள் தலைமை தாங்கி பொதுக்குழுவை நடத்தினாலும், இயக்கத் துணைவிதிகளின் படி நமது இயக்கத்தின் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியாது: அவரை 04-09-2022 அன்று நடந்த பொதுக்குழுவுக்கு மட்டுமே தலைவராக கருதப்பட வேண்டும். எனவே., இயக்கத்தின் தலைவராக ஒருவரை செயற்குழு இணத்துக்கொள்ளலாம் என கருத்து தெரிவித்தார். .

3. எனவே, காலியாக உள்ள தலைவர் பதவிக்கு, திரு V. கார்த்திகை ராஜன் அவர்கள் திரு ந சுப்ரமனியன் அவர்களைத் தலைவராக முன் மொழிய, துணைத்தலைவர் திரு V ஐயப்பன் அவர்கள் வழி மொழிந்தார். அவரிடம் சம்மதம் பெறப்பட்டு, திரு ந சுப்ரமனியன் அவர்களைத் தலைவராக இணைத்துக்கொள்ள/ **(co opt)** செய்யு ஒரு மனதாக தீர்மானம் நிறைவேறியது.

4. காலியாக உள்ள செயலாளர் (சட்டம்) பதவிக்கு உறுப்பினர் திரு நபீஸ் அஹமத் அவர்களை நியமிக்கக் கோரி தலைமையகச் செயலாளர் திரு ஜெ மனோகர் அவர்கள் முன் மொழிய, பதிப்பக செயலாளர் திரு G கோவிந்த சாமி அவர்கள் வழி மொழிய செயற்குழுவில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேறியது.

5. காலியாக உள்ள செயலாளர் (மக்கள் தொடர்பு) பதவிக்கு உறுப்பினர் திரு குணசேகரன், தஞ்சாவூர் மாவட்டம், அவர்களை நியமிக்கக் கோரி தலைவர் திரு ந. சுப்ரமனியன் அவர்கள் முன் மொழிய, கலைத்தொடர்புச் செயலாளர் திரு சாந்தகுமார் அவர்கள் வழி மொழிய, தொலைபெசி மூலம் திரு குணசேகரன் அவர்களிடம் சம்மதம் பெறப்பட்டு, செயற்குழுவில் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேறியது

6. நமது இயக்கம், அமைச்சர் திரு.செந்தில் பாலாஜியை எதிர்த்து உச்ச நீதி மன்றம் சென்று வழக்காடி வெற்றி பெற்றுள்ளதை நினைத்து இந்த செயற்குழு மகிழ்கிறது. இந்த வெற்றிக்குப் பாடுபட்ட நமது தலைவரையும், இலவசமாக வாதாடிய உச்ச நீதிமன்ற வழக்கறிஞர்கள் திரு பிரசாந்த் பூஷன், திரு. பிரணவ் சச்தேவா மற்றும் ஜடின் பரத்வாஜ் அவர்களையும் இயக்கத்தின் சார்பாக பாராட்டி நன்றியைத் தெரிவிக்கிறோம்

7. 04-09-2022 அன்று நடந்த பொதுக்குழுவில், தலைவராகப் பொறுப்பேற்றிருந்த திரு K.மனுராஜ் அவர்கள் மன்றத் தகாமைக்கு ஒவ்வாத (unparlimentary words) சில சொற்களை உபயோகித்தது வருத்தமளிப்பதாக உள்ளது. ஊழல் எதிர்ப்பு இயக்கம் என்பது ஒரு மதிப்பு மிக்க சபையாகும். எனவே இயக்கத்துக்கு களங்கம் வருமாறு எந்த ஒரு செயலும் நிகழக்கூடாது என்பதால், திரு மனுராஜ் அவர்கள் மீது இது குறித்து ஒரு தன்னிலை விளக்கம் கேட்டுக் கடிதம் எழுதுமாறு பொதுச்செயலாளரை நிர்வாகக் குழு கேட்டுக்கொள்கிறது.

8. கீழ்மட்ட மாநிலத் தலைமையும், கிளைகளும், கடந்த மூன்றாண்டுகளாக ஆண்டு வரவு செலவு கணக்குகள் ஏதும் சமர்ப்பிக்கவில்லை. அலுவலர்களின் முறைப்படியான

தேர்தலும் நடத்தப்படவில்லை. குழுக்கூட்டங்கள் நடந்தால், தலைமையகத்துக்கு கூட்டத்தின் தீர்மானங்கள் அனுப்பப்படுவதில்லை. எனவே, மாவட்டங்கள் மற்றும் கிளைகளில் இருந்து இது சம்பந்தமான அனைத்து விபரங்கலையும் பெற பொது செயலாளர் நடவடிக்கை எடுத்து அடுத்த கூட்டத்தில் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இறுதியில் பொதுச் செயலாளர் நன்றியுடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

| | |
|---|---|
| (ஒப்பம்) | (ஒப்பம்) |
| V. ஐயப்பன் | V கார்த்திகை ராஜன் |
| துனைத் தலைவர் | பொதுச் செயலாளர் |

---

# பத்திரிகைச் செய்திகள்

இது உங்கள் இடம்

## இவர்களின் 'டபுள் ஆக்ட்' சூப்பர்!

தினமலர் - 11.09.2022

## கருத்து சுதந்திரம் எல்லை மீறுவது சரியல்ல!




பெண்ணுக்கு நஷ்ட ஈடு வழங்காமல் இழுத்தடிப்பு

## 5 ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு சிறை தண்டனை, அபராதம்

● ஆந்திர உயர் நீதிமன்றம் தீர்ப்பு

என்.மகேஷ்குமார்

அமராவதி

பெண்ணிடம் நிலம் பெற்றுக் கொண்டு அதற்கு நஷ்ட ஈடு வழங்காதது தொடர்பான வழக்கில், 5 ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு சிறை தண்டனையும் அபராதமும் விதித்து ஆந்திர உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

ஆந்திர மாநிலம், நெல்லூரை சேர்ந்த சாய் பிரம்மா எனும் பெண்ணுக்கு சொந்தமான நிலத்தை அரசு கையகப்படுத்தியது. அதற்கு நஷ்ட ஈடு வழங்க கோரி அந்த பெண் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இதனை விசாரித்த நீதி மன்றமும், அந்த பெண்ணுக்கு நஷ்ட ஈடு வழங்க உத்தரவிட்டது. ஆனால், பல ஆண்டுகள் கழிந்தும் நஷ்ட ஈடு வழங்கப்படவில்லை.

நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகு பொறுப்பு வகித்த 5 நெல்லூர் மாவட்ட ஆட்சியர்களும் நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை. இதையடுத்து ஆந்திர உயர் நீதிமன்றத்தில் சாய் பிரம்மா மீண்டும் வழக்கு தொடர்ந்தார். இதனை விசாரித்த நீதிமன்றம், முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி மன்மோகன் சிங்குக்கு ஒரு மாதம் சிறை தண்டனையும், ரூ.1 லட்சம் அபராதமும் விதித்தது. எஸ்.எஸ். ராவத் ஐஏஎஸ் அதிகாரிக்கு 2 மாதம் சிறை தண்டனையும் ரூ.1,000 அபராதமும் விதித்தது. சேஷகிரி ராவ், முத்தியால ராஜு, இந்தியாஸ் ஆகிய மேலும் 3 ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு 2 வாரம் சிறை தண்டனையும் ரூ.1,000 அபராதமும் விதித்தது. நெல்லூர் ஐஏஎஸ் அதிகாரிகள் மற்றும் வருவாய் துறை அதிகாரிகளின் ஊதியத்தில் இருந்து அந்த பெண்ணுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்து டாக்கீஸ்

தினமலர்
சென்னை | சனிக்கிழமை | 3.9.2022




# பட்டா இல்லாத அடுக்குமாடி குடியிருப்பு திட்டத்தில் வீடு வாங்காதீர்!

அடுக்குமாடி குடியிருப்பு திட்டங்களில் வீடு வாங்குவோர், அது அமைந்துள்ள நிலம் தொடர்பான விஷயங்களில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். கட்டுமான திட்டம் முறையாக அனுமதி பெற்றுள்ளதா என்று பலரும் கவனமாக பார்க்கின்றனர்.

இதன் அடிப்படையிலேயே வங்கிக் கடன் உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு விண்ணப்பிக்கின்றனர்.

இதில், அந்த கட்டுமான திட்டம் அமைந்துள்ள நிலம் தொடர்பான விஷயங்களில் பலரும் அலட்சியமாக இருக்கின்றனர்.

இத்தகைய திட்டங்களை வீடு வாங்க அணுகுவோரில் பலரும், சம்பந்தப்பட்ட நிலத்துக்கு பட்டா உள்ளதா, யார் பெயரில் இருக்கிறது என்பதை தெளிவாக விசாரிப்பது இல்லை.

இதனால், போலி பட்டாக்களை பயன்படுத்தி, தகுதி இல்லாத நிலங்களில், சிலர் குடியிருப்புகளை கட்டி விற்று விடுவது நடக்கிறது.

அடுக்குமாடி குடியிருப்பு திட்டம் என்றால், அதற்கு கட்டுமான அனுமதி வழங்கிய துறையும், கடன் வழங்கும் வங்கியும், பட்டா உள்ளிட்ட ஆவணங்களை ஆய்வு செய்து இருப்பர். சரியான ஆவணங்கள் இல்லாத நிலையில், கட்டுமான திட்ட அனுமதி கிடைக்காது என்ற புரிதலின் அடிப்படையில், மக்கள் பட்டா உள்ளிட்ட விஷயங்களை அலட்சியம் செய்கின்றனர்.

இத்தகைய நினைப்புகள் அடிப்படையில் முடிவுகள் எடுப்பது, வீடு வாங்குவதில் உங்களுக்கு சிக்கல்களை ஏற்படுத்தும். திட்ட அனுமதி இருந்தாலும், வங்கிகள் கடன் கொடுத்தாலும், சம்பந்தப்பட்ட நிலத்தின் உண்மை தன்மையை சரி பார்ப்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

அடுக்குமாடி வீடுகளை வாங்குவோர், பத்திரப் பதிவு முடிந்தவுடன், எல்லா வேலைகளும் முடிந்து விட்டதாக நிம்மதியாக இருந்து விடுகின்றனர். ஆனால், வேலை அத்துடன் முடிந்து விடாது. வீட்டுக்கு பட்டா வாங்க வேண்டுமல்லவா...



**கவனத்திற்கு**

- விற்பனை நிறுவனத்திடம் ஆவண நகல்கள் பெற்று, சட்ட ஆலோசகர் வாயிலாக ஆய்வு செய்வது நல்லது. அதில் சந்தேகம் எழும் நிலையில், கட்டுமான நிறுவனத்திடம் விளக்கம் பெற வேண்டும்
- நாம் உட்பிரிவு பட்டா வாங்காமல் இருந்தால், தன்னுடைய பட்டா மூலம், நீங்கள் வாங்கிய இடத்துக்கும் உரிமை கோரலாம். பட்டாவைக் காட்டி, இன்னொருவருக்கு சொத்தை விற்பனை கூட செய்யலாம். அதனால் சிக்கல்கள் ஏற்படக் கூடும்.

வாங்கலாம். ஆனால், அடுக்குமாடி குடியிருப்புக்கு எப்படி பட்டா வாங்குவது.

உதாரணமாக, அடுக்குமாடி குடியிருப்பில் ஆறு வீடுகள் இருந்தால், இந்த ஆறு பேரும் தங்களுக்கென தனியாக உட்பிரிவு பட்டா வாங்க வேண்டும்.

அடுக்குமாடி வீட்டில் வீடு வாங்கியிருந்தாலோ, அதற்கு உட்பிரிவு பட்டா வாங்குவது மிகவும் அவசியம்.

ஏனென்றால், நாம் வீடு வாங்குவதற்கு முன்போ அல்லது மனையில் ஒரு பகுதியை வாங்குவதற்கு முன்போ, அந்த மனை ஒருவருக்கு சொந்தமாக இருந்திருக்கும்.

அந்த மனைக்குரிய பட்டா அவரிடம் இருக்கும். ஒரு வேளை உட்பிரிவு பட்டாவை வாங்காமல் இருந்து விட்டால், பிற்காலத்தில் சிக்கல்கள் வரலாம்.

நிலங்களை வகைப்படுத்தி, அது எந்த வகையான நிலம் என்பதை ஆவணப்படுத்துவது வருவாய்த் துறையின் வேலை. இந்த நிலங்களின் உரிமையாளர்களுக்கு பட்டாவையும் அரசு வழங்கியிருக்கும். வருவாய்த் துறை அளித்த பட்டா ஒருவருக்கு இருக்கும் போது, அந்த மனை அவருக்குரியதாகவே இருக்கும். பத்திரம் இருந்தாலும், பட்டா தான் செல்லுபடியாகும்.

அந்தச் சொத்துப் பத்திரப்பதிவு மூலம் உங்களுக்குரியது என்பதை மறைத்து சொத்தை விற்கலாம்.

ஆவணப்படி, உங்கள் வீடு அமைந்துள்ள குறிப்பிட்ட இடத்துக்கு உட்பிரிவு பட்டா இல்லை என்றால் சிக்கல் எழும்.

உட்பிரிவு பட்டா பெறாமல் இருக்கும் பட்சத்தில், சொத்தை விற்றவருக்கு அனுகூலமாகி விடும்.

அடுக்குமாடி வாங்கியவர்கள் உட்பிரிவு பட்டா கோரி விண்ணப்பித்தாலோ அல்லது ஒரு மனையில், ஒரு பகுதியை வாங்கியவர்கள் உட்பிரிவு பட்டா கேட்டு விண்ணப்பித்தாலோ, சொத்து பிரிக்கப்பட்டு, மனையை உட்பிரிவு செய்து வருவாய்த் துறை பட்டா அளிக்கும்.

பொதுவாக, அடுக்குமாடி குடியிருப்பு திட்டங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களிடம் இருந்து நிலம் வாங்கி மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக, நான்கு வெவ்வேறு நபர்களிடம் நிலம் வாங்கப்பட்டு இருந்தால், நான்கு பேரின் பட்டாவையும் ஆய்வு செய்ய வேண்டும்.

அதிலும், குறிப்பாக, கட்டுமான நிறுவனத்தின் பெயரில் பட்டா உள்ளதா அல்லது அவர்களுக்கு விற்றவர் பெயரில் பட்டா உள்ளதா என்பதை துல்லியமாக ஆய்வு செய்ய வேண்டும். சில இடங்களில் உரிமையாளர் வேறு ஒருவராக இருப்பார்; அவருக்கு முந்தைய நபர் பெயரில் பட்டா

# காசேதான் இங்கு கடவுளடா....?? லஞ்சத்தில் புரளும் ஸ்ரீரங்கம் சர்வேயர்.

## கண்டுகொள்ளுமா? திருச்சி லஞ்ச ஒழிப்புத்துறை? ஸ்ரீரங்கம் மக்கள் கோரிக்கை...

திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் வட்டத்தில் வரும் ஸ்ரீரங்கம் தாலுகா ஆபிஸ் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் ஸ்ரீரங்கம் சர்வேயர் அலுவலகம் திருச்சி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்ட அலுவலக மாடியில் இயங்கி வருகிறது. இதில் தற்போது திருமதி-நறுமலர்(?) என்பவர் ஸ்ரீரங்கம் டவுன் சர்வேயராக பணியாற்றி வருகிறார்.

இவர் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்கள் எழுந்த வண்ணம் உள்ளன. இவரது பணியான சப்டிவிசன் செய்து நிலங்களை அளந்து கொடுப்பதும், பட்டா மாற்றம், பெயர் மாற்றம், இட வரைபடம் போன்ற நிலம் சம்பந்தமான அனைத்து வேலைகளையும் செய்து கொடுப்பது தான். ஸ்ரீரங்கம் சர்வேயர் பதவி என்பது பணம் கொழிக்கும் பதவி என்பதால் இவர் இந்த பதவிக்கு தனது மேலதிகாரிகளுக்கு ஒன்றரை லட்சம் பணம் லஞ்சமாக கொடுத்துதான் இங்கு வந்துள்ளதாக அலுவலக ஊழியர்கள் கூறுகிறார்கள்.

அதனால் இங்கு எந்த வேலை நடந்தாலும் பணம் கொடுத்தால் மட்டுமே பேப்பர் நகரும் அவல நிலை உள்ளது. இவர் தனது அலுவலகத்திற்கே சரியாக வருவதில்லை என்றும் - இது பற்றி மக்கள் போனில் கேட்டால் எப்போது பார்த்தாலும் வெளியே உள்ளேன். நிலம் அளக்கும் பணிக்கு சென்றுள்ளேன் என்ற பதில்தான் வருகிறதாம். ஏன் அவர் போன் எடுப்பதே கிடையாது என்கின்றனர் இவரை தேடி அலையும் மக்கள். ஸ்ரீரங்கம் பகுதியில் நில அளவை, பட்டா மாற்றம், பெயர் மாற்றம் போன்றவைகளுக்கு மக்கள் 6 மாதம் முதல் 1 வருடம் வரை அதற்கு மனு போட்டு பணம் கட்டி பலர் காத்துகிடக்கின்றனர்.

ஆனால் இவரிடம் சப்டிவிஷன் செய்ய 20,000 முதல் 30,000 வரையில் வரைபடம் நேம் டிரான்ஸ்பர் பட்டா மாற்றத்திற்கு ஆளுக்கு தகுந்தார் போல் பணம் பேரம் பேசி கொடுத்தால் ஒரே நாளில் பேப்பர் இவரிடம் மூவ் ஆகி அனைத்து வேலைகளும் முடிந்து விடும் என பொதுமக்கள் புலம்புகின்றனர்.

இவர் தனது அலுவலக உதவியாளராக உள்ள பெண் மூலமும் ஒரு ஆட்டோ டிரைவரும் இவருக்கு மேற்கண்ட பணிகளை விரைவாக செய்ய புரோக்கர்களாக செயல்படுகிறார்கள் என இங்குள்ளவர்கள் கூறுகிறார்கள்.

மேலும் ஸ்ரீரங்கம் சர்வேயர் இங்கு இருந்து பணி ஓய்வு பெற்ற இரண்டு சர்வேயர்களை தனது அலுவலகத்தில் அமர வைத்து அவர்கள் சொல்படி அவர்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு வரைபடம் பட்டாவை திருத்தி கோயில் இடங்களை கூட முறைகேடாக பெயர் மாற்றம் செய்து தருவதாக பொது மக்கள் புலம்புகின்றனர்.

இது சம்பந்தமாக இவரது வருவாய்த்துறை மேலதிகாரிகளான DRO, AD ஸ்ரீரங்கம் சப் கலெக்டர், தாசில்தார் ஏன் திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவரிடமே பல முறை புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் இல்லை என புலம்புகின்றனர் சமூக ஆர்வலர்கள். இது சம்பந்தமாக சர்வேயர் மேடம் பேசும் போது நான் ஒன்றும் சும்மா லஞ்சம் வாங்கவில்லை. லஞ்சப் பணத்தை மாவட்ட மந்திரிகள், வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு மாதந்தோறும் பங்கு கொடுத்துதான் இந்த பதவியில் உள்ளேன்.

**ஏமாற்றும் அரசு அதிகாரிகள்!**
**ஏமாறும் பொதுமக்கள்!**
**அரசுக்கு அவப்பெயர்!!**
**போராட்டம் நடத்தினால்தான் ஞானம் பிறக்குமா?**
**அரசு அதிகாரிகளின் அலட்சியம்!**

என்னை ஒன்றும் யாரும் செய்ய முடியாது என கூறுவதாக பொதுமக்கள் கூறுகின்றனர்.

மக்கள் பணி ஆற்ற வேண்டிய ஸ்ரீரங்கம் சர்வேயர் லஞ்சம் கொடுத்தால்தான் வேலை செய்வேன் என அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் இவ[illegible] திருச்சி மாவட்ட நிர்வாகமும், ல[illegible] துறையும் நடவடிக்கை எ[illegible] என்பதே ஸ்ரீரங்கம் மக்களின் [illegible] உள்ளது. மாட்டுவாரா? ஸ்ரீர[illegible] லஞ்ச ஒழிப்பு துறையிடம்... [illegible] பார்ப்போம்.

இலஞ்சம் தவிர்!　　Date of Publication: 5th of Every Month　　நெஞ்சம் நிமிர்!!

**நேர்மை நெறி- செப்டம்பர் 2022**

Registered with the Registrar of News Papers for India,New Delhi, Regn.No.TNBIL/2003/10419

SSB/Chennai City North Divn Regn.No.TN/CCn/671/2018-20

PERMITTED TO POST WITHOUT PREPAYMENT VIDE WPP NO. TN/PMG(CCR)WPP533/2018-20

## List of Emergency Helpline Numbers All Over in India

| Helpline Number | Department |
|---|---|
| 100 | Police |
| 101 | Fire |
| 102 | Ambulance |
| 103 | Traffic Police |
| 104 | State level Helpline for Health |
| 108 | Disaster Management/ Medical Helpline |
| 112 | All in one Emergency Number (General Emergency Department of Telecommunications (DoT)) |
| 131 | Indian Railway General Enquiry |
| 139 | Railway Enquiry |
| 181 | Domestic abuse and sexual violence-Women's Helpline |
| 197 | Directory enquiry service |
| 198 | Telephone Complaint Booking |
| 1031 | Anti Corruption Helpline |
| 1033 | Emergency Relief Centre on National Highways |
| 1066 | Anti-poison |
| 1071 | Air Accident |
| 1072 | Train accident |
| 1073 | Road Accident/ Traffic Help Line |
| 1090 | Anti terror Helpline/Alert All India |
| 1091 | Women Helpline in Distress |
| 1092 | Earth-quake Help line service |
| 1096 | Natural Disaster Control Room |
| 1097 | AIDS Helpline |
| 1098 | Child Abuse Hotline |
| 1099 | Central Accident and Trauma Services |
| 1551 | Kisan Call Center |
| 1906 | LPG emergency helpline number |
| 1910 | Blood Bank Information |
| 1919 | Eye Donation/ Eye bank information service |
| 1947 | Aadhar Card-UIDAI (Unique Identification authority of India),1800-180-1947) |
| 1950 | Election Commission of India |
| 1800-11-4000 | National Consumer Helpline |

# நேர்மை நெறி

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தின் **திங்களிதழ்**

ஆசிரியர் : வே. கார்த்திகை ராஜன்

வெளியீட்டுச்செயலாளர் : ஜி கோவிந்தசாமி:

Permitted to Posting 7th to 13th
Posted at Patrika Channel
(Egmore RMS/1) on 13 Sept 2022
Due to corona published online)

.மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே!

***பெறுநர்***

IF UNDELIVERED, PLEASE RETURN TO

**ACM, 155, KONNUR HIGH ROAD,**

AYANAVARAM, CHENNAI-23

Owned by Anti Corruption Movement, Chennai and published through online on its behalf of Govindasamy (9841026766) from No.155, “Nambakam” Konnur High Road, Ayanavaram, and Chennai-600 023 and printed by Thiru G Parthasarathy at VPS PRINTERS, No 292, TH Road, Chennai-600005 Editor: V.Karthikai Rajan

இலஞ்சம் கொடுக்காதீர்!　　இலஞ்சம் கொடுக்க விடாதீர்!!